**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்.**

**முன்னிலை: திரு.வீ.காளிதாசன், பி.காம்.,எல்.எல்.எம்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, பல்லடம்.**

**2026–ம் வருடம் மார்ச் மாதம் 05–ம் நாள், வியாழக்கிழமை**

**அசல் வழக்கு எண்.122/2019**
**CNR No.TNTI10-000162-2019**

எம்/எஸ் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா,
கேத்தனூர் கிளை,
அதற்காக அதன் கிளை மேலாளர். ...வாதி

...எதிர்...

என்.லிங்கமுத்து ...பிரதிவாதி

இந்த வழக்கு இறுதியாக 25.02.2026 ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன் இறுதி விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஆர்.பாலகிருஷ்ணன், பி.எஸ்.சி.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதியை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால், அவரைத் தோன்றாத் தரப்பினராக உத்தரவிடப்பட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

## தீர்ப்புரை

பிரதிவாதிகள் வாதியிடமிருந்து பெற்ற கடன் நிலுவைத் தொகையான ரூ.71,774/–ஐ 12 சதவீத வட்டியுடன் திருப்பி செலுத்த வேண்டுமென்று வாதியால் இந்த தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) <u>வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்</u> :

பிரதிவாதி வாதி வங்கியை அணுகி கடந்த 24.08.2007 தேதியில் "பயிர்க்கடன்" வேண்டி ரூ.20,000/– கடனாக வேண்டும் என்றும், அதனை வட்டியுடன் திருப்பி செலுத்தி விடுவதாக கூறி அதற்குரிய விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்து வாதி வங்கியில் கொடுத்துள்ளார். மேற்படி பிரதிவாதி கேட்டுக் கொண்டதற்கிணங்க அவரது விண்ணப்பத்தை பரிசீலனை செய்து வாதி வங்கியானது A/c.No.30232057052 என்ற வங்கி கணக்கின் மூலம் பிரதிவாதிக்கு ரூ.20,000/–யை கடனாக வழங்கியுள்ளது. மேற்படி கடன் தொகைக்கு ஆதரவாக பிரதிவாதி கடந்த 24.08.2007ம் தேதியில் புரிந்துணர்வு கடிதத்துடன் கொதுவை ஒப்பந்தத்தை எழுதிக்கொடுத்துள்ளார். மேற்படி பிரதிவாதி வாங்கிய கடனை புதுப்பித்து கடந்த 12.05.2010, 27.12.2012 மற்றும் 15.12.2016 தேதியில் வாதி வங்கிக்கு உயிர்ப்பு கடிதங்கள் எழுதிக்கொடுத்துள்ளார். பிரதிவாதி வாங்கிய கடனை திருப்பி செலுத்த இயலாததால் மேற்படி கடனை மாறுதல் செய்து தவணைக் கடனாக மாற்றுமாறு கடந்த 30.12.2013ம் தேதியில் ஒரு கடிதம் எழுதிக்கொடுத்துள்ளார். மேற்படி வாதி வங்கியும் மேற்படி பிரதிவாதியின் வேண்டுகோளை ஏற்று மேற்படி பயிர்க்கடனை தவணைக் கடன் எண்.33547953208 ஆக மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேலும், மேற்படி பிரதிவாதி கடந்த 30.12.2013ம் தேதியில் வாதி வங்கிக்கு ரிசெடியூல் கடிதம் ஒன்றையும் எழுதிக்கொடுத்துள்ளார். வாதி பணத்தை செலுத்துமாறு பலமுறை கேட்டும் பிரதிவாத பணத்தை செலுத்தவில்லை. எனவே, கடந்த 02.04.2018ம் தேதியில் மேற்படி தொகையை திருப்பி செலுத்துமாறு பிரதிவாதிக்கு வாதி வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பியுள்ளது. மேலும், பிரதிவாதி வாங்கிய கடனுக்கான வங்கி கணக்கு விவரங்களை வாதி வங்கி பராமரித்து வருகிறது. மேற்படி பிரதிவாதி

வேண்டுமென்றே வாதி வங்கியில் பெற்ற கடனை திருப்பி செலுத்தாமல் காலம் கடத்தி வருகிறார். இந்நிலையில் கடந்த 28.05.2019 தேதிய நிலவரப்படி பிரதிவாதி வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் நிலுவைத் தொகை வட்டியுடன் சேர்த்து மொத்தம் ரூ.72,774/- ஆகும். மேற்படி பிரதிவாதி கடன் நிலுவைத்தொகையை வட்டியுடன் திரும்ப செலுத்த கடமைப்பட்டுள்ளார். எனவே வாதி வங்கிக்கு 28.05.2019 தேதிய நிலவரப்படி பிரதிவாதி செலுத்த வேண்டிய கடன் நிலுவை தொகை ரூ.72,774 /- யை 12 % ஆண்டு வட்டியுடன் பிரதிவாதி, வாதி வங்கிக்கு செலுத்த தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்பதே வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கமாகும்.

2) பிரதிவாதிக்கு நீதிமன்றத்திலிருந்து நேரடியாக அழைப்பாணை சார்பு செய்யப்பட்டும், பிரதிவாதி முன்னிலையாகாததால் பிரதிவாதி தோன்றாத் தரப்பினராக உத்தரவிடப்பட்டுள்ளார்.

**3) தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை:-**

வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா? என்பதே இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை ஆகும்.

4) வாதி தரப்பில் வங்கியின் கிளை மேலாளர் சுந்தரமூர்த்தி என்பவர் வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு அவர் மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேலும், வாதி வங்கியின் உதவி கிளை மேலாளர் ராஜசேகர் என்பவர் வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டு அவர் மூலமாக வா.சா.ஆ.9 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் எவ்வித சாட்சியங்களோ, சான்றாவணங்களோ எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. வாதி தரப்பு கேட்கப்பட்டது.

5) <u>பிரச்சனைக்கான தீர்வு:–</u>

வாதி தரப்பு கேட்கப்பட்டது. வாதி தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் பிரதிவாதிக்கு அவரது 24.08.2007 ம் தேதியிட்ட விண்ணப்பத்தின் பெயரில் வாதி வங்கி சார்பில் கணக்கு எண்.30232057052 ன் படி பயிர்க்கடனாக ரூ.20,000/–ம் வழங்கப்பட்டது என்றும், அதற்காக பிரதிவாதி 24.08.2007 ம் தேதியில் புரிந்துணர்வு கடிதத்துடன் கூடிய கொதுவை ஒப்பந்தம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றும், மேற்படி தொகைக்கு பிரதிவாதி 12 சதவீத ஆண்டு வட்டி செலுத்துவதாக ஒப்புக்கொண்டும் எழுதிக் கொடுத்துள்ளார் என்றும், பிரதிவாதிகள் வாங்கிய கடனை அவ்வபோது புதுப்பித்து கடந்த 12.05.2010, 27.12.2012 மற்றும் 15.12.2016 தேதிகளில் உயிர்ப்பு கடிதங்களும் எழுதி கொடுத்துள்ளார் என்றும், பிரதிவாதி தனது பயிர்ககடனை தவணைக்கடனாக மாற்றுமாறு கடந்த 30.12.2013 தேதியில் கடிதம் கொடுத்துள்ளார். அதன் பின்னரும் பிரதிவாதி அவர் வாங்கிய கடனை முறையாக செலுத்தாமல் இருந்து வந்துள்ளார். எனவே, வாதி வங்கி பிரதிவாதியை பலமுறை கேட்டும் பணத்தை திரும்ப செலுத்தவில்லை. எனவே, வாதி வங்கி சார்பாக கடந்த 02.04.2018 தேதியில் வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பிய பின்னரும் பிரதிவாதி கடன் தொகையை செலுத்த முன்வரவில்லை. ஆகவே, பிரதிவாதி கடன் தொகையை திரும்ப செலுத்த தீர்ப்பாணை பிறப்பித்து வழக்கை செலவுத்தொகையுடன் அனுமதித்து உத்தரவிடவேண்டும் என்று வாதிட்டார்.

<u>6. தீர்வு:–</u>

இந்த அசல் வழக்கானது வாதி வங்கியில் பிரதிவாதி பெற்ற கடனை பொறுத்து திருப்பிச் செலுத்தாமல் இருப்பதால் மேற்படி கடன் நிலுவைத்

தொகை ரூ.72,774/—ஐ வட்டியுடன் வழக்கு தாக்கல் செய்த நாள் முதல் செலுத்த வேண்டும் என்று தீர்ப்பாக கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) வா.சா.1 சாட்சியத்தின் படி பிரதிவாதி வாதி வங்கியில் 24.08.2007 ம் தேதியிட்ட விண்ணப்பத்தின் பேரில் விவசாய கடனாக ரூ.20,000/—ம் கணக்கு எண். 30232057052 ன்படி கடனாக பெற்றுள்ளார். மேற்படி கடன் தொகைக்கு ஆதரவாக 24.08.2007 ம் தேதியில் புரிந்துணர்வு கடிதத்துடன் கூடிய கொதுவை ஒப்பந்தம் எழுதிக்கொடுத்துள்ளார். மேலும் பிரதிவாதி அவர் வாங்கிய கடனுக்கு 12 சதவீதம் வட்டி செலுத்துவதாகவும் ஒப்புக்கொண்டுள்ளார். மேற்படி புரிந்துணர்வு கடிதம், கொதுவை ஒப்பந்தம் ஆகியவை வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி அவர் வாங்கிய கடனை 12.05.2010, 27.12.2012 மற்றும் 15.12.2016 ஆகிய தேதிகளில் புதுப்பித்து உயிர்ப்புக் கடிதங்கள் எழுதிக் கொடுத்துள்ளார். உயிர்ப்புக் கடிதங்கள் வா.சா.ஆ.3 முதல் வா.சா.ஆ.5 ஆவணங்களாகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தனது பயிர்ககடனை தவணைக்கடாக மாற்றுமாறு கடந்த 30.12.2013 தேதியில் கடிதம் கொடுத்துள்ளார். மேற்படி கடிதம் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி பணத்தை செலுத்தாமல் இருந்து வந்துள்ளதால், வாதி வங்கி பணத்தை செலுத்துமாறு பல முறை கேட்டும் பிரதிவாதி பணத்தை செலுத்தவில்லை. பிரதிவாதி வாங்கிய கடனுக்கான விவரங்களை வாதி வங்கி பராமரித்து வருகிறது. பிரதிவாதி வாங்கிய கடனை திருப்பி செலுத்த கடமைப்பட்டுள்ளார். எனவே இந்நீதிமன்றம் வாதி வாங்கிய கடனை வட்டியுடன் திரும்ப செலுத்த வேண்டி தாவாவை தாக்கல் செய்துள்ளது என்பதே ஆகும்.

8) வா.சா.1 சாட்சியத்தின் மூலமும் மற்றும் வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களின் மூலம் பிரதிவாதி வாதி வங்கியில்

பிரதிவாதி விவசாய கடனாக ரூ.20,000/-ஐ கணக்கு எண். 30232057052 ன்படி பெற்றுள்ளார் என்பதும், பிரதிவாதி வாங்கிய கடனை திருப்பி செலுத்த கால அவகாசம் கேட்டு அவ்வபோது உயிர்ப்பு கடிதங்கள் கொடுத்துள்ளார்கள் என்பதும், மேலும் வங்கி கணக்கு பட்டியல் மூலம் பிரதிவாதி வங்கிக்கு ஒப்புக்கொண்ட வகையில் கடனை வட்டியுடன் திருப்பிச் செலுத்தவில்லை என்பதும் தெரிய வருகிறது. வாதி வங்கி ஒரு தேசியமையமாக்கப்பட்ட வங்கி ஆகும். வங்கி மற்றும் நிதி நிறுவனங்களில் கடன் பெற்ற ஒவ்வொருவரும் கடனை திருப்பி செலுத்த வேண்டியது அவசியம் ஆகும். வழக்கு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் மூலம் பிரதிவாதி அவர் வாங்கிய கடனை திரும்ப செலுத்தாமல் இருந்து வருகிறார் என்பது நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தொடர்ந்து தோன்றாத்தரப்பினராக இருந்து வரும் சூழ்நிலையில் வா.சா.1 சாட்சியம் மற்றும் வழக்கு சான்றாவணங்களின் அடிப்படையில் பிரதிவாதிக்கு எதிராக தாவா நிரூபிக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேற்கண்ட விவாதத்தின் அடிப்படையில் வாதி வங்கி வழக்குரையில் கோரியுள்ளவாறு பிரதிவாதி வாங்கிய கடன் தொகை மற்றும் வட்டி ரூ.72,774/-ஐ வட்டியுடன் திரும்ப செலுத்த வேண்டும் என்று பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது.

**முடிவாக,**

பிரதிவாதி தாவா தொகையான ரூ.72,774/-ஐ வழக்கு தாக்கல் செய்த நாள் முதல் தொகை முழுவதும் கொடுத்து தீரும் வரை ஆண்டுக்கு 6 சதவீதம் வட்டியுடன் சேர்த்து செலவு தொகையின்றி கொடுக்க வேண்டுமென்று தாவாவை அனுமதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிறகு என்னால் பிழை

நீக்கம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் 05.03.2026 அன்று அவையறிய பகரப்பட்டது.

V KALIDASAN Digitally signed by V KALIDASAN Date: 2026.03.05 17:35:15 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**பல்லடம்.**

**பிற்சேர்க்கை:–**

**வாதி தரப்பு சாட்சி :–**

வா.சா.1 – சுந்தரமூர்த்தி
வா.சா.2 – ராஜசேகர்

**வாதி தரப்பில் குறியிடப்பட்டுள்ள சான்றாவணங்கள்:–**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 24.08.2007 | பிரதிவாதி வாதிக்கு எழுதிக்கொடுத்த புரிந்துணர்வு கடிதம் அசல். |
| வா.சா.ஆ.2 | 24.08.2007 | பிரதிவாதி வாதிக்கு எழுதிக்கொடுத்த கொதுவை ஒப்பந்தம் அசல். |
| வா.சா.ஆ.3 | 12.05.2010 | பிரதிவாதி வாதிக்கு எழுதிக்கொடுத்த உயிர்ப்புக் கடிதம் அசல். |
| வா.சா.ஆ.4 | 27.12.2012 | பிரதிவாதி வாதிக்கு எழுதிக்கொடுத்த உயிர்ப்புக் கடிதம் அசல். |
| வா.சா.ஆ.5 | 15.12.2016 | பிரதிவாதி வாதிக்கு எழுதிக்கொடுத்த உயிர்ப்புக் கடிதம் அசல். |
| வா.சா.ஆ.6 | 30.12.2013 | பிரதிவாதி வாதிக்கு எழுதிக்கொடுத்த கடன் மறுசீரமைப்பு கடிதம் மற்றும் ஒப்பந்தம் அசல். |
| வா.சா.ஆ.7 | 02.04.2018 | வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் அசல். |
| வா.சா.ஆ.8 | – | பிரதிவாதியின் அஞ்சலக ஒப்புகை அட்டை அசல். |
| வா.சா.ஆ.9 | – | பிரதிவாதி பெற்ற கடன் எண்.33547953208 க்கான கணக்கு விவரத்தாள். |

**<u>பிரதிவாதி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u>** இல்லை

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2026.03.05 17:35:23 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**பல்லடம்.**

அ.வ.எண்.122/2019
**சீரான**/வரைவு தீர்ப்புரை
நாள்.05.03.2026
மா.உ.நீ., பல்லடம்